Dalmia
Bharat Limited

cement! sugar! refractories! power!

1010/02

August 01, 2022

BSE Limited
P J Towers, Dalal Street,
Fort Mumbai - 400001
Scrip Code: 542216

National Stock Exchange of India Limited
"Exchange Plaza", Plot No. C-1, Block G
Bandra – Kurla Complex, Bandra(East),
Mumbai – 400 051
Symbol: DALBHARAT

Subject: Newspaper Advertisement

Ref: Regulation 30 & 47 of the SEBI (Listing Obligations and Disclosure Requirements) Regulations, 2015 ("Listing Regulations")

Dear Sir/Madam,

This is to inform you that the Company, pursuant to Rule 6(3)(a) of the Investor Education and Protection Fund Authority (Accounting, Audit, Transfer and Refund) Rules, 2016, as amended, has published a Notice in Business line and Dinamani on August 01, 2022, in connection with the proposed transfer of shares to Investor Education and Protection Fund Authority.

The same has been made available on the Company's website at www.dalmiabharat.com.

We request you to please take the same on record.

Thanking you,

Yours faithfully

For Dalmia Bharat Limited

DALMIA BHARAT LIMITED NEW DELHI

Rajeev Kumar
Company Secretary

Dalmia Bharat Limited
11th and 12th Floor, Hansalaya Building, 15 Barakhamba Road, New Delhi - 110 001, Delhi, India
T +91 11 2346 5100 W www.dalmiabharat.com CIN: L14200TN2013PLC112346
Registered Office: Dalmiapuram, District Tiruchirappalli – 621 651, Tamil Nadu, India
*A **Dalmia Bharat Group** company, www.dalmiabharat.com*

Demand for Indian steel in key export markets down 17-48% in June quarter

High export duty, cheaper Chinese offering and consumption slowdown take a toll

ABHISHEK LAW
New Delhi, July 31

Export of finished steel from India to its key markets that include Europe, and West Asia saw a 17–48 per cent fall in the April – June period, due to factors such as high export duty (imposed in May), competitive prices from China and global consumption slowdown. Steel exports in Q1FY23 were down 39 per cent y-o-y.

Data on steel shipments from different ports—Goa, Mumbai, Gujarat, Dhamra, Paradeep, among others—show a similar fall of between 3 and 47 per cent.

Belgium, Italy markets

Finished steel includes flat, longs and alloy and stainless steel offerings. As per data compiled by the Union Steel Ministry, and accessed by *BusinessLine*, two of the key European markets – Belgium and Italy – saw a 27 and 47 per cent fall in steel exports for Q1FY23, dipping to approximately 3,98,000 tonnes and 2,62,000 tonnes, respectively.

Steel exports to these countries in the year-ago-period was 5,47,000 tonnes and 4,97,000 tonnes.

In the West Asian markets of Turkey and the UAE – two countries that had driven Indian steel exports last year – the y-o-y fall (Q1FY23 vs Q1FY22) is 18 per cent and 15 per cent, respectively. For instance, Turkey bought 1,92,000 tonnes of steel in Q1FY23 versus 2,33,0000 tonnes in Q1FY22.


Steel exports in Q1FY23 were down 39 per cent y-o-y

The UAE imported 1,85,000 tonnes of Indian steel during the period under review versus 2,17,000 tonnes in the same period last year.

In the neighbourhood, exports to Nepal fell over 28 per cent y-o-y to 1,31,000. Vietnam, another key market, too saw a drop in imports..

Long, flat variants down

The Ministry data shows that across other export markets — including Vietnam, Spain and the UK — the fall was a steep 46 per cent, y-o-y.

"The effect of a high export duty was reflected in June orders. Month-on-month, June exports were down over 20 per cent. Moreover, demand from key markets was weak and Chinese offerings were at a price lower than ours. So our exports were badly hit," an Indian steel mill official said.

"Recessionary pressures are there too," he added. As per Ministry data, flat product exports saw a 41 per cent decline, y-o-y, in the period under review. Amongst the categories, cold-rolled coil and sheet exports saw the highest fall and stood at 1,16,000 tonnes, down 62 per cent. Exports in the year-ago-period were 3,05,000 tonnes.

Hot-rolled coil sheet, and hot-rolled coil strips fell 48 per cent and 42 per cent, respectively, for the June-quarter.

Tin plate sales were down 46 per cent for the period.

The hit in non-flat products (also called longs) exports was over 57 per cent.

Bars & rods and railway material exports (part of long products) fell 67 and 70 per cent, respectively.

Export of semi-finished products—billets, slabs, etc—fell 43 per cent in Q1FY23, the Ministry data showed.

Raw jute rates drop 5-7% on estimated rise in production, good arrivals

Output is estimated at 95 lakh bales

SHOBHA ROY
Kolkata, July 31

Raw jute prices have dropped around 5-7 per cent over the last month on the estimated rise in production and good arrivals. Prices are currently ruling at around ₹6,200 a quintal against ₹6,500 a month ago.

Jute output is estimated to be six-to-seven per cent higher at around 95 lakh bales in 2022-23 as against close to 90 lakh bales last year. This year's carryover stock is estimated to be about 19 lakh bales against5 lakh bales last year. The total availability is likely to be close to 114 lakh bales, as against 95 lakh bales last year.

According to Raghav Gupta, Chairman, Indian Jute Mills Association, the crop availability is good and all the mills have reopened and running at good capacity. "Prices have seen a correction of around 5-7 per cent at the beginning of harvesting period. It is likely to come down further when arrivals start picking up," Gupta told *BusinessLine*.


The total availability is likely to be close to 114 lakh bales, as against 95 lakh bales last year

Quality could be impacted

Enthused by the highly remunerative prices of raw jute over the last two years, farmers have gone in for higher sowing covering close to 8 lakh hectare this year. However, inclement weather has prevailed in jute growing areas in June and July, with flooding in North Bengal and Assam and less rainfall in South Bengal affecting retting.

The quality of jute fibre is expected to deteriorate and production of TDN3 and TDN5 grades will likely increase to 75 per cent of the total produce and these grades can only be used for sacking manufacturing, an industry insider said.

The raw jute prices were close to ₹7,000-7,200 a quintal in April-May this year despite higher production of the fibre in 2021-22 due to low carryover stock. Accordingly, the Jute Commissioner, had, in a notification dated September 30, 2021, fixed the price of jute at ₹6,500 a quintal for 2021-22 till June 30, 2022 to rein in the prices. However, mills were finding it difficult to procure at these rates as market rates are much higher.

However, given the robust availability of raw jute this year, industrial production is estimated to increase to 13 lakh tonnes, compared to close to 12 lakh tonnes last year, as most mills have resumed operations. The industry will be able to supply anywhere between 34-36 lakh bales on government account, apart from meeting other domestic and export commitments.

Volatility coming down, semi-finished steel exports likely to resume shortly: Atul Bhatt

ABHISHEK LAW
New Delhi, July 31

State-owned steel-maker Rashtriya Ispat Nigam Limited (RINL) is hoping export of blooms and billets—considered as semi-finished steel products—to pick up once the current volatility in the market settles down, its Chairman and Managing Director Atul Bhatt said.

THE BL INTERVIEW

The country's second largest steel-making PSU reported a turnover of ₹28,082 crore in FY22, up 56 per cent y-o-y. Similarly, exports witnessed a 37 per cent jump (y-o-y) to ₹5,607 crore.

In an interview with *BusinessLine*, Bhatt spoke about the export outlook, impact of geo-political tensions on the company's business, and efforts to secure coal mine linkages, among others. Excerpts:

What is the company's export outlook for this year?

RINL has consistently exported sizeable volumes of semi-finished steel products in the longs segment like blooms and billets for the past few years, which are the major sources of raw material to many steel rolling mills across the globe. There is no export duty on semi-finished steel. We are expecting to return to such exports shortly, once the current volatility in market prices and costs settle down.

Reports suggest the company has not taken any export orders in May and June. Your comments.

The recent geopolitical turmoil triggered by Russian-Ukraine conflict, higher raw material prices, weak demand from global buyers and lower offers by Russia have adversely affected export orders in the period. The volatility, however, is coming down and we expect to return to export of semi-finished steel shortly.

Despite being a shore-based steel plant, there's no captive coal mine or iron ore linkage. Any plans on these?

RINL imports around 5 million tonne per annum (MTPA) of low ash metallurgical coking coal from Australia, the US and Mozambique by entering into long-term agreements through Empowered Joint Committee (EJC) consisting of Directors of SAIL, RINL and NMDC. Besides, indigenous coking coal is being procured by us from Central Coalfields Ltd and Bharat Coking Coal Ltd.

Waiver of import duty on coking coal and imposition of export duty on iron ore and pellets increase the cost-competitiveness of steel producers like RINL. We are dependent on procurement of iron ore and coking coal at market prices.

ATUL BHATT,
CMD, RINL

For iron ore, RINL has an arrangement with NMDC for supply of around 10 million tonnes, and any shortfall is met from other domestic sources like Odisha Mining Corporation (OMC) and the Orissa Minerals Development Company Limited—a subsidiary of RINL, SAIL, and NMDC Karnataka, etc.

Has the import duty waiver on coking coal benefited RINL?

Waiver of import duty on coking coal and imposition of export duty on iron ore and pellets increases cost-competitiveness of steel producers like RINL. We are dependent on procurement of iron ore and coking coal at market prices.

The third blast furnace at RINL has been idling since January. Any corrective measures?

Due to multi-fold increase in coking coal prices and inadequate supplies, the company had adopted two blast furnaces operation since the end of January. In spite of this, we registered our best ever production and techno-economics parameters in 2021-22.

The two blast furnaces operation has continued in FY23 as export prices of semi-finished steel sharply corrected, making them un-remunerative.

The present plan is to optimise the production to match the finished steel capacity. Once the export prices settle, we are planning to revert to full production levels.

Country receives 17% above-normal rain in July

Rains to revive over South Peninsula, ease along plains of North-West India

OUR BUREAUS
Thiruvananthapuram/Delhi, July 31

The country has received 16.8 per cent above-normal rainfall in July, the wettest month of the year. However, uneven distribution of rains—excess in south and central India and largely deficient in the East and North-East—has created concerns over any possible adverse impact on kharif crops.

Overall monsoon in first two months has been 8 per cent above normal after June rainfall left with 8 per cent below normal for the entire country.

According to latest data, north-east and east India region has received 44.7 per cent below normal rains in July, but due to 22 per cent higher than normal rainfall in June, the overall deficit in first two months has been contained at 16 per cent. Central India, including Madhya Pradesh, Maharashtra and Gujarat was 30 per cent deficient, but July had bountiful rains at 42.8 per cent above normal. The Southern Peninsula has received 60.4 per cent above normal rains in July whereas it had 14 per cent below normal rain in June.

Troughs, circulation present

After a recess, rains are set to escalate over the South Peninsula even as the ongoing heavy spell over the plains of North-West India reduces in intensity, an IMD update said. The IMD said an unusual and non-monsoon-like trough runs from South Chhattisgarh to Comorin across Telangana, Rayalaseema and Tamil Nadu while a second trough runs from the central parts of South Bay of Bengal to Comorin across South Sri Lanka.

The trough originating from the Bay is forecast to re-orient towards the East Peninsular Coast (around Chennai) and align itself along but along and convert itself into a proper monsoon system off the Andhra Pradesh/Odisha coast later into the week. Forecasts suggest it will be a harbinger for a stronger system capable of rallying the flows around and powering the monsoon in that location to signal another productive session over East and Central India during the first 10 days of August.

Outlook for North-West India indicated continued heavy to very heavy rainfall for the hills for the next five days even as rains reduce in intensity over the plains. As for the South Peninsula, the north-south trough over land and the circulation in the Bay will combine to bring fairly widespread to widespread rainfall with isolated heavy falls, thunderstorms and lightning over Coastal Andhra Pradesh and Rayalaseema from Monday to Wednesday; over Telangana, South Interior Karnataka, Tamil Nadu, Puducherry and Kerala till Monday; and North Interior Karnataka and Lakshadweep, on Tuesday and Wednesday.

Godrej Agro's Q1 income zooms, but PBT down 19%

OUR BUREAU
Pune, July 31

Godrej Agrovet Ltd's (GAVL) total income increased to ₹2,517.5 crore during the first quarter of the current fiscal from ₹2,003.2 crore in the same period a year ago, a growth of 25.7 per cent year-on-year. The company reported an EBITDA of ₹169.3 crore compared with ₹180 crore year-ago period. Profit before tax was ₹102.8 crore during the quarter compared with ₹126.2 crore in the year-ago period.

GAVL is a diversified, research and development-focused agri-business company, dedicated to improving productivity by innovating products and services that increase crop and livestock yields.

BS Yadav, Managing Director, GAVL, said, "All of our businesses, with the exception of crop protection, registered a strong volume growth. We achieved year-on-year growth of 25.7 per cent to clock total income of ₹2,517.5 crore in the first quarter."

Challenging quarter

Yadav added: "However, it was a challenging quarter in terms of profitability as most of our businesses recorded marginal contraction owing to the combination of factors such as high-cost inventory, input cost inflation, deferment of sales and limited transmission. The decline in margin was witnessed in animal feeds, crop protection, and dairy businesses while vegetable oils and poultry segments reported growth in the operating margin."

கோயில் தேர் சாய்ந்து விபத்து: 8 பேர் காயம்

புதுக்கோட்டை, ஜூலை 31: புதுக்கோட்டை நகரில் உள்ள பழமை வாய்ந்த பிரகதம்பாள் உடனுறை திருகோகர்ணேசுவரர் கோயில் ஆடிப்பூரத்தேரோட்டத்தின்போது, தேர் சாய்ந்து விபத்துக்குள்ளானதில் 8 பேர் காயமடைந்தனர்.

புதுக்கோட்டை திருக்கோகர்ணம் கோகர்ணேசுவரர் குடைவரைக் கோயில் ஏழாம் நூற்றாண்டு (கி.பி. 600 முதல் 630 வரை) என மதிப்பிடப்பட்டிருக்கிறது. செயற்கை கட்டுமானங்கள் இல்லாமல், பாறைகளைக் குடைந்து மண்டபங்கள், இறைவன் திருமேனிகள் என்று உருவாக்கப்பட்டுள்ளன. இந்து சமய அறநிலையத் துறையின் கட்டுப்பாட்டில் உள்ள இக்கோயில், தொண்டைமான் மன்னர்களின் குலதெய்வக் கோயிலாகும். கடந்த இரு ஆண்டுகளாக இக்கோயிலில் ஆடித் திருவிழா நடைபெறவில்லை. இந்நிலையில், நிகழாண்டு கடந்த 23ஆம் தேதி ஆடித் திருவிழா கொடியேற்றத்துடன் தொடங்கியது.

விழாவின் 9ஆவது நாளான ஞாயிற்றுக்கிழமை ஆடிப்பூரத் தேரோட்டம் நடைபெற்றது. காலை 8.50 மணியளவில் நடைபெற்ற தேரோட்ட விழாவில், முதல் தேரில் விநாயகரும், இரண்டாவது தேரில் முருகனும், மூன்றாவது தேரில் பிரகதம்பாளும், நான்காவது தேரில் சண்டிகேஸ்வரரும் எழுந்தருளினர். இந்நிலையில், தேரோட்டம் தொடங்கி இரண்டு அடி இழுத்தவுடன் பிரகதம்பாள் எழுந்தருளியிருந்த தேர் எதிர்பாராத விதமாக சாய்ந்து விபத்துக்குள்ளானது.

இந்த விபத்தில் தேருக்கு அடியில் சிக்கி கொண்டவர்களை அருகில் இருந்தவர்கள் மீட்டனர். இதில், அரிமளம் ராஜகுமாரி (64), புதுக்கோட்டை பழனியப்பா நகர் சரிகா (22), திருக்கோகர்ணம் விஜயலெட்சுமி (65), கோவில்பட்டி வைரவன் (63), திருவப்பூர் ஜெயக்குமார் (54), திருக்கோகர்ணம் அங்காளம்மாள் (60), பழனியப்பா நகர் கலைச்செல்வி (47), அடப்பன்காரச் சத்திரம் ராஜேந்திரன் (48) ஆகிய 8 பேர் காயங்களுடன் புதுக்கோட்டை அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டனர்.

மேலும் இந்த விபத்தில் மயக்கமடைந்த 5-க்கும் மேற்பட்டோருக்கு அந்த இடத்திலேயே முதலுதவி அளித்து வீட்டுக்கு அனுப்பி வைக்கப்பட்டனர்.

தகவலறிந்து மாவட்ட ஆட்சியர் கவிதா ராமு, மாவட்டக் காவல் கண்காணிப்பாளர் வந்திதா பாண்டே, புதுக்கோட்டை சட்டப்பேரவை உறுப்பினர் வை. முத்துராஜா, விராலிமலை சட்டப்பேரவை உறுப்பினர் சி. விஜயபாஸ்கர் உள்ளிட்டோர் நேரில் வந்து பார்வையிட்டு, மீட்புப் பணிகளைத் துரிதப்படுத்தினர்.

சாய்ந்து கிடந்த தேரில் இருந்து பிரகதம்பாள் சிலை மற்றும் அலங்காரப் பொருள்கள் பத்திரமாக மீட்கப்பட்டு கோயிலுக்குள் வைக்கப்பட்டன.

தொடர்ந்து 2 கிரேன்கள் உதவியுடன் தேர் நிமிர்த்தி வைக்கப்பட்டது.

தேர் வெள்ளோட்டம் விடப்படாததால், விபத்து நேரிட்டதாக பக்தர்கள் வேதனை தெரிவித்தனர்.



புதுக்கோட்டை பிரகதம்பாள் கோயில் தேரோட்டத்தின்போது சாய்ந்த தேர்.

பொய் பிரசாரத்தில் ஈடுபடுகிறார் எடப்பாடி பழனிசாமி

அமைச்சர் தங்கம் தென்னரசு

சென்னை, ஜூலை 31: தமிழகத்துக்கு வரவேண்டிய தொழில் முதலீடுகள் வேறு மாநிலங்களுக்குச் சென்றுவிட்டதாக எதிர்க்கட்சித் தலைவர் எடப்பாடி பழனிசாமி பொய் பிரசாரத்தில் ஈடுபட்டு வருவதாக மாநில தொழில் துறை அமைச்சர் தங்கம் தென்னரசு தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் ஞாயிற்றுக்கிழமை வெளியிட்ட அறிக்கை:

வேதாந்தா மற்றும் பாக்ஸ்கான் நிறுவனம் சார்பில் தமிழ்நாட்டில் செய்யவிருந்த முதலீடு மகாராஷ்டிர மாநிலத்துக்குச் சென்று விட்டதாக எதிர்க்கட்சித் தலைவர் எடப்பாடி பழனிசாமி அறிக்கை விடுத்துள்ளார். பொய்யான இத்தகவலுக்கு கடும் கண்டனத்தை தெரிவித்துக் கொள்கிறேன்.

வேதாந்தா நிறுவனத்தைப் பொறுத்தவரையில், சுற்றுச்சூழல் பாதிப்புக் காரணங்களுக்காக மாசுக் கட்டுப்பாடு வாரியம், இயக்குவதற்கான இசைவை வழங்க மறுத்துள்ளது.

இந்த வழக்கு உச்சநீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளது என்ற அடிப்படை விவரம் கூட எதிர்க்கட்சித் தலைவருக்கு தெரியவில்லை.

அதேவேளையில், பாக்ஸ்கான் நிறுவனத்துடனான தமிழ்நாடு அரசின் தொழில் முதலீடு தொடர்பான உறவு 2006-ஆம் ஆண்டு தொடங்கி தற்போது வரை சிறப்பாக தொடர்ந்து வருகிறது. பாக்ஸ்கான் நிறுவனம் பல்வேறு தொழில் திட்டங்களைத் தமிழ்நாட்டில் நிறுவி உள்ளதே அதற்குச் சாட்சியமாக திகழ்கிறது. இத்திட்டங்களால் பெருமளவில் முதலீடுகளும், பல்லாயிரக்கணக்கானோருக்கு, குறிப்பாக பெண்களுக்கும், இளைஞர்களுக்கும் வேலை வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

மின் வாகனங்கள் மற்றும் உபகரணங்களுக்கான முதலீடுகளை ஈர்ப்பதில் தமிழ்நாடு அரசு தொடர் முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது. கடந்த ஒரு வருட காலத்தில், ரூ.11,580 கோடி முதலீடு மற்றும் 28,612 நபர்களுக்கு வேலைவாய்ப்பு என்ற வகையில் 22 திட்டங்களுக்குப் புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

அதிமுக ஆட்சியைப் போன்று புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் மேற்கொள்வதோடு நிறுத்திக்கொள்ளாமல் அத்திட்டங்கள், செயல்படுத்தப்பட வேண்டும் என்று மாநில தொழில்துறை மும்முரமாகச் செயல்பட்டு வருகிறது. இதற்காக, அனைத்து சேவைகளையும், முதலீட்டாளர்களுக்கு திமுக அரசு அளித்து வருகிறது. இதன் பொருட்டு, பல திட்டங்கள் தற்போது தொடக்கி வைக்கப்பட்டும், அடிக்கல் நாட்டப்பட்டும் வருகின்றன.

நாட்டிலேயே முதல்முறையாக, தூத்துக்குடியில் ரூ.1000 கோடி முதலீட்டில் 1,150 ஏக்கரில் அமையவுள்ள பன்னாட்டு அறைகலன் பூங்கா இதற்குச் சிறந்த எடுத்துக்காட்டாகும்.

தமிழகத்தின் ஒட்டுமொத்த வளர்ச்சிக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் தலைமையிலான தமிழக அரசு அல்லும்பகலும் அயராது உழைத்து வருகிறது. உலக நாடுகளில் உள்ள முதலீட்டாளர்களின் ஒட்டுமொத்த கவனமும் இன்றைக்கு தமிழகம் மீது திரும்பி உள்ளது.

தொழில்வளர்ச்சிக்காக தொழில் முதலீட்டாளர்களை ஈர்க்கும் இந்த அரசின் நோக்கத்திற்கு எதிராக பொய் பிரசாரத்தில் ஈடுபட்டு தமிழகத்துக்கு வரும் முதலீடுகளையும், தமிழக இளைஞர்களுக்கு உருவாகும் புதிய வேலைவாய்ப்புகளையும் கெடுக்க வேண்டாம் என்று எடப்பாடி பழனிசாமியிடம் கேட்டுக் கொள்கிறேன் என்று அதில் தெரிவித்துள்ளார் அமைச்சர் தங்கம் தென்னரசு.

காமன்வெல்த்: இந்திய அணிக்கு முதல்வர் வாழ்த்து

சென்னை, ஜூலை 31: காமன்வெல்த் போட்டிகளில் பங்கேற்றுள்ள இந்திய அணியினர் சிறப்பாகச் செயல்பட தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் வாழ்த்து தெரிவித்துள்ளார். இதுகுறித்து, அவர் ஞாயிற்றுக்கிழமை ட்விட்டர் பக்கத்தில் வெளியிட்ட பதிவு:

பர்மிங்காம் காமன்வெல்த் போட்டியில் இந்தியாவுக்குச் சிறப்பான தொடக்கம் அமைந்துள்ளது. பளுதூக்கும் வீரர்கள் தங்களது அபார முயற்சிகளால் பதக்கப் பட்டியலில் இந்தியாவைத் தூக்கி நிறுத்தியுள்ளனர். தங்கம் வென்ற மீராபாய் சானு, வெள்ளி வென்ற பிந்தியாராணி தேவி, சங்கேத் சர்கர் மற்றும் வெண்கலம் வென்ற குருராஜா ஆகியோருக்கு எனது பாராட்டுகள்.

காமன்வெல்த் போட்டியில் கலந்து கொண்டுள்ள இந்திய அணியினர் சிறப்பாகச் செயல்பட எனது வாழ்த்துகள் என்று கூறியுள்ளார் முதல்வர் மு.க.ஸ்டாலின்.

அருப்புக்கோட்டையில் தம்பதி கொலை, கொள்ளை வழக்கு: 5 பேர் கைது; 13 பவுன் நகைகள் பறிமுதல்

கைது செய்யப்பட்ட பழனிசாமி, அடைக்கலம், கண்ணன், மணிகண்டன், சிவசக்தி.

அருப்புக்கோட்டை, ஜூலை 31: அருப்புக்கோட்டையில் ஓய்வுபெற்ற ஆசிரியர் தம்பதியர் கொலை வழக்கில் ஞாயிற்றுக்கிழமை, 5 பேரைக் கைது செய்த போலீஸார், அவர்களிடமிருந்து 13 பவுன் நகைகளைப் பறிமுதல் செய்தனர்.

விருதுநகர் மாவட்டம் அருப்புக்கோட்டை எம்.டி.ஆர். நகர் 2 ஆம் வீதியில் வசித்த ஓய்வுபெற்ற ஆசிரியர் தம்பதியான சங்கரபாண்டியன், ஜோதிமணி ஆகியோர் கடந்த ஜூலை 18 ஆம் தேதி வீட்டினுள் கழுத்தறுத்துக் கொலை செய்யப்பட்டுக் கிடந்தனர். மேலும் ஜோதிமணி அணிந்திருந்த நகைகள் கொள்ளையடிக்கப்பட்டன.

இச்சம்பவம் தொடர்பாக டி.எஸ்.பி. சகாய ஜோஸ் தலைமையில் 7 தனிப்படைகள் அமைத்து குற்றவாளிகளை போலீஸார் தேடி வந்தனர். இதுதொடர்பாக போலீஸார், செம்பட்டியைச் சேர்ந்த அழகர்சாமி மகன் பழனிசாமி (27), அடைக்கலம் (30), ஆறுமுகம் மகன் கண்ணன்(31), அழகுமலை மகன் மணிகண்டன்(26), புஷ்பராஜ் மகன் சிவசக்தி (23) ஆகிய 5 பேரைப் பிடித்து விசாரித்தனர்.

இதில் அவர்கள்தான் குற்றவாளிகள் என்பது தெரியவந்ததையடுத்து போலீஸார் அந்த 5 பேரையும் ஞாயிற்றுக்கிழமை இரவு கைது செய்தனர். மேலும் அவர்களிடமிருந்து 13 பவுன் நகைகள் பறிமுதல் செய்யப்பட்டன.

தென் மாநிலங்களில் குடியரசுத் தலைவர் கொடி பெறும்

முதல் மாநிலம் தமிழகம்

சென்னை, ஜூலை 31: தமிழக காவல்துறைக்கு வழங்கப்பட்ட இந்திய குடியரசுத் தலைவரின் கொடிக்கு பல்வேறு சிறப்புகள் உள்ளன. அதன் விவரம்:

குடியரசுத் தலைவரின் கொடியானது குறைந்தபட்சம் 25 ஆண்டுகள் அமைதியை நிலைநாட்டுதல், போரில் ஈடுபடுதல் தொடர்பாக தேசத்துக்கு தனித்துவமான சேவையாற்றியதை அங்கீகரிக்கும் வகையில் இந்திய ராணுவத்தின் சார்பில், காவல் துறைக்கு வழங்கப்படும் உரிய கௌரவமாகும்.

வீரம், துணிவு, அர்ப்பணிப்பு, தொழில் சார்ந்த திறன், நேர்மை, சேவை ஆகியவற்றை இந்தக் கொடி பிரதிபலிக்கிறது. தமிழக காவல் துறைக்கு வழங்கப்பட்டுள்ள இந்திய குடியரசுத் தலைவரின் கொடி, பஞ்சாப் மாநிலம் மலர்கோட்லா மாவட்டத்தைச் சேர்ந்த பழங்கால அரச குலத்தவரின் கலையம்சம் மிகுந்த வேலைப்பாடுகளால் வடிவமைக்கப்பட்டது. இவர்கள் கொடிகள், முத்திரைகள், அடையாளச் சின்னம் ஆகியவற்றை பழங்காலம் முதல் வடிவமைத்து வருகிறார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்திய ராணுவம், மாநில காவல்துறைகள், மத்திய காவல் படைகள் ஆகியவற்றுக்கும் அடையாள சின்னங்களை ஏற்கெனவே வடிவமைத்துக் கொடுத்துள்ளனர். மேலும், வெளிநாட்டு ராணுவங்களுக்கும், நிறுவனங்களுக்கும் அடையாள சின்னங்களை வடிவமைத்து கொடுத்து வருகின்றனர்.

இந்தியாவில் கொடி என்பது பண்டைய காலத்தில் இருந்தே பாரம்பரிய பழக்கவழக்கத்தில் ஒன்றாக இருந்து வருகிறது.

ஆங்கிலேயர் காலத்தில் மன்னர்கள், ராணிகள் பெயரில் இருந்த கொடிகள், 1950-ஆம் ஆண்டோடு முடிவுக்கு வந்தன. அதன் பின்னர் இந்திய குடியரசுத் தலைவரின் கொடி மட்டுமே ஒரு படைப் பிரிவையோ, காவல் பிரிவையும் அங்கீகரிக்கும் வகையிலும், கௌரவிக்கும் வகையிலும் வழங்கப்படுகிறது.

இந்திய குடியரசுத் தலைவரின் கொடி கடந்த 1951-ஆம் ஆண்டு முதல் முறையாக இந்திய கடற்படைக்கு வழங்கப்பட்டது. மாநில காவல் துறைகளில், ஐந்தாவது காவல்துறையாக தமிழக காவல் துறை இந்த கொடியை பெற்றுள்ளது.

ஏற்கெனவே தில்லி, ஜம்மு காஷ்மீர், உத்தர பிரதேசம், மகாராஷ்டிரம் ஆகியவை பெற்றுள்ளன. தென் மாநிலங்களில் தமிழக காவல் துறையே முதல் முதலாக குடியரசுத் தலைவரின் கொடியைப் பெற்றுள்ளது என்பது சிறப்புக்குரியது.

தோள்பட்டை சின்னம்... கொடியின் சின்னத்தையே 'நிஷான்' என்ற பெயரில் டிஜிபி தொடங்கி காவலர் வரை அனைவரும் தங்கள் இடது கை தோள்பட்டையில் இனி அணிவார்கள் என தமிழக காவல் துறையினர் தெரிவித்துள்ளனர்.

'அதிமுக விவகாரத்தில் பாஜக தலையீடு இல்லை'

சென்னை, ஜூலை 31: அதிமுக உள்கட்சி விவகாரத்தில் பாஜக தலையிடுவதாகக் கூறுவது தவறான தகவல் என்று அதிமுக மூத்த தலைவர் பண்ருட்டி ராமச்சந்திரன் தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் சென்னையில் ஞாயிற்றுக்கிழமை செய்தியாளர்களிடம் கூறியதாவது:

எம்ஜிஆர் உயிருடன் இருந்தபோதே அதிமுகவுக்கு ப.உ. சண்முகம், நெடுஞ்செழியன் உள்படபலர் பொதுச் செயலாளர்களாக இருந்திருக்கின்றனர். அதேபோன்று, பொதுக் குழு உறுப்பினர்கள் எல்லோரும் ஒன்று சேர்ந்துதான் திமுகவில் இருந்து எம்ஜிஆரை நீக்கினார்கள்.

அதனால், எவர் பொதுச் செயலாளர், பொதுக் குழுவில் எவருக்கு ஆதரவு என்பதெல்லாம் முக்கியமல்ல. யார் மக்களின் நம்பிக்கையைப் பெற்ற தலைவர் என்பதுதான் முக்கியம். தற்போது அதிமுகவில் நிலவி வரும் குழப்பங்கள் வரும் காலங்களிலும் தொடரும். இன்னும் பல பிரச்னைகள் வரும். பிறகுதான் ஒரு தீர்வு கிடைக்கும். தற்போதைய அதிமுகவில் உள்ள நிர்வாகிகள் அனைவரும் நியமனத்தால் பதவிக்கு வந்தவர்களே தவிர தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் அல்லர்.

எடப்பாடி பழனிசாமி, ஓ.பன்னீர் செல்வம் இடையேயான பிரச்னை கடல் நுரையைப் போன்றது. காற்றடித்தால் காணாமல் போய்விடும். அதனால், அதிமுக தொண்டர்கள் பொறுமை காக்க வேண்டும். அதிமுகவில் ஒன்றரை கோடி தொண்டர்கள் உள்ளனர் என்பதே போலி நம்பிக்கை. முறையாக ஆதார் அட்டை கொண்டு கணக்கிட வேண்டும்.

சென்னை அசோக் நகரில் முன்னாள் அமைச்சர் பண்ருட்டி ராமச்சந்திரனை அவரது வீட்டில் ஞாயிற்றுக்கிழமை சந்தித்த வி.கே.சசிகலா.

அதிமுக உள்கட்சி விவகாரத்தில் பாஜகவின் தலையீடு உள்ளதாகக் கூறுவது தவறான தகவல் என்றார் அவர்.

முன்னதாக, பண்ருட்டி ராமச்சந்திரனுடனான சந்திப்புக்குப் பிறகு செய்தியாளர்களைச் சந்தித்த சசிகலா, அதிமுக ஒருங்கிணைந்து செயல்பட வேண்டும் என்றும், தமது தலைமையில் கட்சி இயங்க வாய்ப்புள்ளதாகவும் தெரிவித்தார்.

மத்திய அரசின் வினாடி– வினா போட்டி: வெற்றி பெறும் மாணவர்களுக்கு ரூ.10 லட்சம் உதவித் தொகை

சென்னை, ஜூலை 31: சுதந்திரத் திருநாள் அமுதப் பெருவிழாவையொட்டி மத்திய அரசு சார்பில் 13 முதல் 18 வயதுக்கு உள்பட்ட மாணவர்களுக்கு வினாடி வினா போட்டிகள் நடத்தப்படவுள்ளன. இதில் வெற்றி பெறும் மாணவர்களுக்கு ரூ.10 லட்சம் கல்வி உதவித் தொகை வழங்கப்படவுள்ளது.

இது குறித்து பள்ளிக் கல்வி இயக்குநரகம் சார்பில் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்களுக்கு அனுப்பப்பட்ட சுற்றறிக்கை: சுதந்திரத் திருநாள் அமுதப் பெருவிழாவையொட்டி மத்திய பெட்ரோலியம் மற்றும் இயற்கை எரிவாயு துறை அமைச்சகம் சார்பில் 13 முதல் 18 வயதுக்கு உள்பட்ட மாணவர்களுக்கு இந்திய பாரம்பரியம் குறித்த வினாடி வினா போட்டி நடத்தப்படவுள்ளது. இது குறித்த அனைத்து விவரங்களும் www.akamquiz.com என இணையதளத்தில் வெளியிடப்பட்டுள்ளன.

மாவட்ட அளவிலான போட்டியில் வெற்றி பெறுவோர் மாநில அளவிலான போட்டிக்குத் தகுதி பெறுவர். இதையடுத்து மண்டல மற்றும் தேசிய அளவிலான போட்டிகள் நடைபெறும். இறுதிப் போட்டியில் வெற்றி பெறும் மாணவர்கள் ரூ.10 லட்சம் கல்வி உதவித் தொகைக்கு தகுதி பெறுவர். ஒட்டுமொத்தமாக ரூ.55 லட்சம் மதிப்பிலான கல்வி உதவித் தொகை வழங்கப்படும். இந்த வினாடி வினா போட்டி 17 மொழிகளில் நடைபெறவுள்ளது.

நாட்டின் கலாசாரம், பாரம்பரியத்தை இளம் தலைமுறையினரிடம் எடுத்துச் செல்வதே இந்தப் போட்டியின் நோக்கமாகும். இது குறித்து அனைத்துப் பள்ளிகளுக்கும் தெரியப்படுத்தி வினாடி வினா போட்டியில் திரளான மாணவர்கள் பங்கேற்க ஊக்குவிக்க வேண்டும். மாவட்ட அளவில் வெற்றி பெற்ற மாணவர்களின் விவரங்களை பள்ளிக் கல்வி இயக்குநரகத்துக்கு அனுப்பி வைக்க வேண்டும் என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தீவிரவாத அமைப்புடன் தொடர்பு: ஆம்பூர் கல்லூரி மாணவர் மீது 8 பிரிவுகளின் கீழ் வழக்கு

ஆம்பூர், ஜூலை 31: ஐஎஸ்ஐஎஸ் தீவிரவாத அமைப்புடன் தொடர்பில் இருந்த ஆம்பூர் கல்லூரி மாணவர் மீது 8 பிரிவுகளின் கீழ் சனிக்கிழமை வழக்குப் பதிவு செய்யப்பட்டது.

திருப்பத்தூர் மாவட்டம், ஆம்பூர் நிலிக்கொல்லை மசூதி தெருவைச் சேர்ந்தவர் மீர் அனாஸ் அலி (22). இவர் ஆம்பூர் அருகே தனியார் பொறியியல் கல்லூரியில் படித்து வந்தார். அவர் தடை செய்யப்பட்ட வெளிநாட்டில் உள்ள தீவிரவாத அமைப்புகளுடன் தொடர்பில் இருந்ததாகக் கூறப்படுகிறது.

அவரை தீவிரமாகக் கண்காணித்து வந்த மத்திய உளவுப் பிரிவு போலீஸார் சனிக்கிழமை அதிகாலை ஆம்பூரில் உள்ள அவரது வீட்டில் கைது செய்தனர். அவரை அணைக்கட்டு காவல் நிலையம் அழைத்துச் சென்று, தனியறையில் வைத்து விசாரணை நடத்தினர்.

திருச்சி, வேலூர், சென்னை ஆகிய பகுதிகளில் இருந்து வந்த மத்திய உளவுப் பிரிவு போலீஸார் அவரிடம் தீவிர விசாரணை நடத்தினர். அவர் பயன்படுத்தி வந்த வெளிநாட்டு கைப்பேசிகள், மடிக்கணினி ஆகியவற்றையும் பறிமுதல்செய்து, அதில் உள்ள தகவல்களை ஆய்வு செய்தனர். சுமார் 20 மணி நேரம் நடந்த விசாரணைக்குப் பிறகு, அவர் தடை செய்யப்பட்ட ஐஎஸ்ஐஎஸ் தீவிரவாத அமைப்புடன் தொடர்பில் இருந்தது தெரியவந்தது.

அதே போல் அவர் சமூக வலைதளங்களில் தடை செய்யப்பட்ட தீவிரவாத அமைப்புகளுக்கு ஆதரவாகவும், இந்திய இறையாண்மைக்கு எதிராகவும் கருத்துகளை பதிவிட்டதற்கான ஆதாரங்களும் கிடைத்ததாகக் கூறப்படுகிறது.

மீர் அனாஸ் அலியின் கைப்பேசி உரையாடல்கள், அவரது சமூக வலைதளப் பதிவுகளை மத்திய உளவுப் பிரிவு போலீஸார் ஏற்கெனவே தீவிரமாகக் கண்காணித்து வந்திருந்ததாக தெரியவந்துள்ளது. உரிய ஆதாரங்கள் கிடைத்ததையடுத்து அவரை மத்திய உளவுப் பிரிவு போலீஸார் கைது செய்தனர்.

கைதான மீர் அனாஸ் அலி.

அணைக்கட்டு காவல் நிலையத்தில் சனிக்கிழமை இரவு சுமார் 12 மணி வரை நடந்த விசாரணைக்குப் பிறகு, மத்திய உளவுப் பிரிவு போலீஸார் அவரை ஆம்பூர் நகர போலீஸாரிடம் ஒப்படைத்தனர்.

அவர் மீது ஆம்பூர் நகர போலீஸார் குற்ற எண்: 193/2022, இந்திய தண்டனைச் சட்டம் 121, 122, 125 மற்றும் சட்டவிரோத நடவடிக்கைகள் தடுப்புச் சட்டம் 1967 பிரிவு 18, 18ஏ, 20, 38, 39 ஆகிய 8 பிரிவுகளின் கீழ் வழக்குப் பதிவு செய்து, நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தினர். இதையடுத்து, அவர் வேலூர் மத்திய சிறைக்கு அனுப்பப்பட்டார்.